2019 ஜுலை 1]

மாணாக்கர்களின் சேர்க்கைக்குண்டான வழிவகைகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

கால்நடைத் தீவனம் வழங்குதல்

***24187—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளின்மூலம் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் மற்றும் உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் முதலில் காணிக்கையாக்குகின்றேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் தேவையினை நிறைவு செய்வதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பதனால், கால்நடைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கும் கடைகளிலிருந்து தீவனங்களை வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியலிலே ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது என்று பேராசையோடு சிலர் கூறித் திரிந்த நேரத்திலே, வெற்றிடம் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை, அந்த வெற்றிடத்தை தலைவர் கலைஞர் அவர்களின் மகன் தளபதி ஸ்டாலின் இடம்பெற்று நிரப்பியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை வார்த்தைகளால் மட்டுமல்ல, தன்னுடைய உழைப்பாலும், நடந்து முடிந்த நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களிலே தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற நாடாளுமன்றத் தொகுதிகள் உட்பட 38 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 13 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு மகத்தான வெற்றியினைப் பெற்று, மக்கள் சக்திக்குச் சொந்தக்காரராக விளங்குகின்ற எங்கள் மக்கள் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களுக்கு நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.*

கால்நடைகளுக்கு மானிய விலையிலே நியாய விலைக் கடைகள் மூலமாக தீவனங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேள்வி கேட்டதனுடைய நோக்கமே, அரசின் கொள்கை முடிவிலே ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்து, தமிழக அரசு அதற்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஏனென்று சொன்னால், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய விவசாயிகள், கால்நடைகளை நம்பி குடும்பங்களை நடத்துகின்றவர்கள், ஆடு, பசு மாடுகளை வளர்த்து, குடும்பங்களை நடத்துகின்றவர்களாக உள்ளனர். இன்றைக்கு மானிய விலையிலே பொருட்கள் கிடைக்காமல், மாட்டுத் தீவனங்கள் அல்லது ஆடுகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வெளியே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பல ஆடு, மாடுகள் சாகவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியிருக்கின்றன. மாட்டுத் தீவனங்களை வாங்கும் சக்தி அந்த மக்களுக்குக் கிடையாது. அரசு கொடுத்திருக்கிற இலவச ஆடு, மாடுகளைப் பார்த்தாலும், அவற்றில் பல உணவில்லாமல் செத்திருக்கும். எனவே, ஆடு, மாடுகளைக் கொடுப்பது பெரிதல்ல. அவற்றிற்கு உணவு கொடுப்பது, அதைவிடப் பெரிது என்பதை இந்த அரசு உணர்ந்து, அந்தக் கால்நடைகளுக்கு மானிய விலையிலே தீவனங்கள் கிடைப்பதற்கு

2019 ஜூலை 1]

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நியாய விலைக் கடைகள் மூலமாக ஒரு நடவடிக்கை எடுத்து, இந்தியாவிற்கே முன்மாதிரியாக தமிழகம் திகழ்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றவண்ணம் இந்தக் கொள்கை முடிவு எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, இந்தியாவிற்கே முன்மாதிரியான திட்டமாகத்தான் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சராக இருந்தவர். அவர்கள் நன்கு அறிவார்கள். பொது மக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருட்களைச் சேமித்து வைத்து வழங்குகின்றோம். புண்ணாக்கு, பருத்திக் கொட்டைகளிலிருந்துதான், அடர் தீவனங்களைத் தயார் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற புல்லையோ, வைக்கோலையோ நம்முடைய ரேஷன் கடைகளில் வைத்து வழங்க முடியாது. புண்ணாக்கையும், பருத்திக் கொட்டையையும் கடையில் வைத்து வழங்க முடியாது.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளைப் பராமரிக்கும் பொருட்டு பல்வேறு வகைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். அதற்கென்று தனித் துறை இருக்கிறது. கால்நடைப் பராமரிப்புத் துறையின்மூலம், வெகு சிறப்பாக அனைத்து வகைகளிலும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கால்நடைகளைப் பாதுகாத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

வேறு துறை சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடு மாடுகள் செத்துக்கொண்டிருக்கின்றன என்கிற ஒரு குறைபாட்டை இங்கே கூறியதால், நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பசுந்தீவனங்கள் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு விதைகளும், பசுந்தீவன மரக் கன்றுகளும் கடந்த 8 வருடங்களாக மானியமாக மட்டுமல்லாமல், இலவசமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 190 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 731 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும், அதேபோல் மானிய விலையிலும், விலையில்லாமலும், கால்நடைகளுக்கு பல்வேறு தீவனங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கோல், புல் ஆகிய தீவனங்களை நீங்கள் நியாய விலைக் கடைகளில் கொடுக்க வேண்டாம். ஆனால், நியாய விலைக் கடைகளில் மாட்டுத் தீவனங்கள், கோழி, ஆடுகளுக்கான தீவனங்கள் ஆகியவற்றைத் தனியாகக் கொடுப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. நீங்கள் மானிய விலையில் தீவனங்கள் கிடைக்கின்றன என்று சொல்கிறீர்கள். ஆனால், நிறைய பேருக்குக் கிடைப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இன்றைக்கு ரேஷன் கடைகளில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழகத்தில் ரேஷன் கடைகளில் 20 கிலோ அரிசி கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். பல ரேஷன் கடைகளில் 15 கிலோ அரிசிதான் கிடைக்கிறது. அதுவும், ஒரு நாள் அரிசி கிடைக்கிறது, இன்னொரு நாள் பருப்பு கிடைக்கிறது, இன்னொரு நாள் பாமாயில் கிடைக்கிறது. ஒரு மாதத்தில் 3 நாட்களுக்கு ரேஷன் கடைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை, மாதத்தில் 3 நாட்கள் ரேஷன் கடைகளில் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் குடும்பத் தலைவி மாதத்தில் 3 நாட்கள் பாதிக்கப்படுகிறார். எனவே, ரேஷன் கடைகளில் அனைத்துப் பொருட்களையும் ஒரே நாளிலே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இன்றைக்கு பல ரேஷன்

2019 ஜூலை 1]

கடைகளில் 60 முதல் 70 சதவிகித அளவிற்குத்தான் பொருட்கள் வருகின்றன என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. இந்த ரேஷன் கடைக்கு இவ்வளவு பொருட்கள் தேவை, அவற்றில் நாங்கள் இவ்வளவு வழங்கியிருக்கிறோம் என்று அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கை கொடுத்தாலே உண்மை தெரிந்துவிடும். சிலர் மாதக் கடைசியில் ரேஷன் கடைக்குச் சென்று பொருள் இல்லையென்று திரும்பிவரும் சூழ்நிலையும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, 100 ரேஷன் அட்டைகள் இருந்தால் அந்த 100 ரேஷன் அட்டைதாரர்களுக்கும் மாதத்தின் 30 நாட்களில் எந்த நாளில் ரேஷன் கடைக்குச் சென்றாலும், அனைத்துப் பொருட்களும் கிடைக்கும் வகையில் நியாய விலைக் கடைகளின்மூலம் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தங்கள்மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சர் ஆவார். பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, ரேஷன் கடைகளில் கால்நடைகளுக்குத் தீவனங்களை வழங்க வேண்டுமென ஒரு கோரிக்கையை வைத்து கேள்வியை எழுப்பினார்கள். பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதால்தான் கூடுதலாக ஒன்றையும் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இப்போது கால்நடைத் துறை மூலமாக அப்பணிகளைச் சிறப்பாக அரசு செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னவுடன் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படவில்லையென்று சொல்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்தின் தேவை, அங்கு என்ன* movement, *என்ன* consumption *என்பதை உணர்ந்து, அதாவது நகர்வு, நுகர்வு ஆகியவற்றின் அடிப்படையில்தான் அடுத்த மாதம் அந்தக் கடைக்கு* allotment *போடப்படுகிறது; ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்தவகையில் 100 சதவிகிதம் அந்தக் கடைகளின் தேவைகளை ஒவ்வொரு மாதமும் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் நிறைவு செய்துகொண்டிருக்கிறோம் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு நாளைக்கு அரிசி, ஒரு நாளைக்கு பருப்பு, ஒரு நாளைக்கு பாமாயில் வழங்குவதாகச் சொன்னார்கள். ஒரு மாதத்தில் 25 ஆம் தேதியிலிருந்து எந்தப் பொருட்களை வழங்கப் போகிறார்களோ அந்த மாத இறுதியில், 30 ஆம் தேதிக்குள் 60 சதவிகிதம், 5 ஆம் தேதிக்குள் 40 சதவிகிதம் என அனைத்துப் பொருட்களும் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டுவிடுகின்றன. எனவே, அனைத்துப் பொருட்களும், அனைத்து நேரங்களிலும் உடனடியாக வழங்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

கால்நடைக் கிளை நிலையம்

***20739—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, வாழவச்சனூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வாழவச்சனூரில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 1,485 மட்டுமே உள்ளது. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு குறைந்தது 3,000 கால்நடை அலகுகளாவது இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வாழவச்சனூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS